



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் கல்லூரி மாணவியின் கல்லூரி கட்டணம் ரூபாய் 20000 மற்றும் 1000 பேருக்கு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதில் ஆ. இராசா எம்.பி., கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., தி.நகர் எஸ்.மோகன், சி.எச்.சேகர், வீ.கவி கணேசன், குறிஞ்சி எஸ்.கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# கொளத்தூர், எழும்பூர், அம்பத்தூர் தொகுதிகளில் மாபெரும் குருதிக் கொடை முகாம்!

## கே.இ.பிரகாஷ் எம்.பி. – அமைச்சர் பி.கே. சேகர் பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை,டிச.1-

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி நேற்று (30.11.2025) கொளத்தூர் மேற்கு பகுதியில் உதயம்.15. உதயத்தின் படை உதிரத்தின் கொடை எனும் தலைப்பில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் என் திலீப் குமார் தலைமையில் நடைபெற்ற மாபெரும் ரத்ததான முகாமில் கழக இளைஞரணி துணை செயலாளர் கே.இ. பிரகாஷ் எம்.பி. ரத்ததான முகாமை துவக்கி வைத்தார்.



தொடர்ந்து எழும்பூர் வடக்கு பகுதியில் உதயம் 16 ரத்தம் கொடுப்போம் உயிர் வாழ! நித்தம் உழைப்பும் கதிர் ஆள்!! என்னும் தலைப்பில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் த.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற மாபெரும் ரத்ததான முகாமையும், மூன்றாவது முகாமாக அம்பத்தூர் வடக்கு பகுதியில் உதயம் 17 . எங்கள் உதயம் எளிமையானது! எங்கள் ரத்தம் வலிமையானது!! எனும் தலைப்பில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற மருத்துவ முகாமையும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி கே சேகர் பாபு ள் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இம்மருத்துவ முகாம்களில் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், பி. கே.மூர்த்தி,எ.நாகராசன்.எம். சி, ஐசிஎப் வ.முரளிதரன், சொ. வேலு, வி சுதாகர், டிஎஸ்பி ராஜகோபால், எம் டி ஆர் நாகராஜ், கே.சந்துரு,சி.மகேஷ்குமார், கே எஸ் எம் நாதன், சரிதா மகேஷ் குமார் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் விஜய், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெ.பாலமுருகன், எஸ் தனசேகர் க. வினோத் மற்றும் கழக செயல் வீரர்கள் நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளர் ஏ.மணி தலைமையில் இளம் தலைவர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாக அனைத்து ஊராட்சிகளிலும் திருமுடிவாக்கம், நடுவீரப்பட்டு, சோமங்கலம், நந்தம்பாக்கம், மலையம்பாக்கம், சிக்கராயபுரம் ஆகிய பகுதிகளில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது நிகழ்ச்சியில் பொறுப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினர் பலர் பங்கேற்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் சார்பில் வையாவூரில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி ஒன்றிய கழக செயலாளர் படுநெல்லி பி.எம் பாபு தலைமையில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் சிறுவேடல் க. செல்வம் எம்.பி. சி.வி.எம்.பி எழிலரசன் எம்.எல்.எ. ஒன்றிய அவை தலைவர் வி.பழனி. ம் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### காரைக்குடி – திருப்பத்தூர் சாலை, கும்மங்குடி கிராமத்தில்

# அரசுப் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து - 11 பேர் பலி!

## உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிவாரண உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, டிச.1-**

**சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காரைக்குடி - திருப்பத்தூர் சாலை, கும்மங்குடி கிராமத்தில் அரசுப் பேருந்துகள் நேருக்குநேர் மோதிக் கொண்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு :-

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காரைக்குடி - திருப்பத்தூர் சாலை, கும்மங்குடி கிராமத்தில் நேற்று (30.11.2025) பிற்பகல் அறந்தாங்கியிலிருந்து திண்டுக்கல் நோக்கிச் சென்ற அரசுப் பேருந்தும், திருப்பூரிலிருந்து காரைக்குடி நோக்கிச் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்தில், பேருந்துகளில் பயணம் செய்த ஒன்பது பெண்கள், இரண்டு ஆண்கள் என மொத்தம் பதினொரு நபர்கள் உயிரிழந்தனர், மேலும், 54 நபர்கள் காயம் அடைந்துள்ளனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு கடும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில், காயமடைந்தவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிப்பதற்காக அருகிலுள்ள அரசு மருத்துவமனைகளிலிருந்து திருப்பத்தூர், காரைக்குடி அரசு மருத்துவமனை மற்றும் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அரசு மருத்துவர்கள் கூடுதலாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேலும், தீவிர சிகிச்சை வழங்கப்பட வேண்டியவர்கள் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் அனைவருக்கும் சிறப்பு சிகிச்சை வழங்கிட அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும் மாவட்ட ஆட்சியரையும் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பனையும் தொடர்புகொண்டு, சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய உயர்தர சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்திடுமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம். சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக இளைஞரணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அலமாதி ஊராட்சி எடப்பாளையம் அருகில் ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் எளிய மக்களுக்கு மதியம் கறி விருந்து வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் ஏ.காசிம் முஹம்மது. பா.சேகர். நா.பரசுராமன். மு.கீதாராமன், சி.முனுசாமி. ஏ.முனுசாமி. எம்.முஹம்மது அலி, சன் சேகர். ராஜசேகர் வாசு, குனசேகர், பிரேமா, ஆர்.சி.சிவசங்கர், எம்.சரவணன். கு.கலைவாணன். புருஷோத்தம்மன். க.பிரபு. கே.வி.தியாகராஜன் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்சியை கிளை செயலாளர் கே.தமிழ்வாணன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பா. நாகலிங்கம்

### டிசம்பர் 1 (2006)



கழகத்தில் 1953ஆம் ஆண்டு உறுப்பினராகி பின்னர், 1957 முதல் 1967 வரை பொன்னேரி வட்டக் கழகப் பொருளாளராகப் பணியாற்றினார்.

1967 மற்றும் 1971 ஆகிய இரண்டு முறை பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடிகாலத்தில் 'மிசா' கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தியாகராயர் நகர் 112வது வட்ட முன்னாள் செயலாளர்

### க.தட்சிணாமூர்த்தி சகோதரி

# சரோஜினி பார்த்தசாரதி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, டிச.1-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி, தியாக ராயர் நகர் 112வது வட்டம், முன்னாள் வட்டச் செயலாளர் தியாகராயர் நகர் க.தட்சிணா மூர்த்தியின் சகோதரியும், தியாக ராயர் நகர் பகுதி முன்னாள் மகளிர் அணி அவைத் தலைவருமான சரோஜினி பார்த்தசாரதி (வயது 85) அவர்கள் நேற்று (30.11.2025 -ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (1.12.2025 - திங்கட்கிழமை) மாலை 2.00 மணி அளவில் அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்அடக்கம் செய்யப்படுகிறது.

### சென்னை தென்மேற்கு மாவட்டப் பிரதிநிதி

# கே.வி.சுதர்சன் சகோதரர் கே.வி.இளையராஜா மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை டிச:1

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர்,135வது வட்டம், கழக முன்னோடி கிருஷ்ண மூர்த்தி, முன்னாள் பகுதி மகளிர் அணி அமைப்பாளர் வீரமணி கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மகனும்,சென்னை தென்மேற்கு மாவட்டப் பிரதிநிதி கே.வி.சுதர்சன் சகோதரருமான கே.வி.இளையராஜா நேற்று 30.11.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் உடல் நல்லடக்கம் இன்று எண்.25, 11வது தெரு புதூர் அசோக் நகர் சென்னை 83 ல் இருந்து புறப்பட்டு வடபழனி ஈடு காட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். குணசேகரன்

### டிசம்பர் 1 (2021)



மாணவப் பருவத்திலேயே, மாணவர் அணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், என்.மோட்டூர் கிளைச் செயலாளர், நான்கு முறை மத்தூர் ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

மத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சமூக சேவையாற்றியதன் காரணமாக 'சமூக விருதுகள்' பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**